DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

Calender

Miscellaneous — Case No — CC 139/17

Priliminary Register

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness for | Prosecution | PW 1 |
| | Defence | |
| | Court | |

Name — Katchammal

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

11.04.2019 முதல் விசாரணை:

நான் தனக்கன்குளத்தில் வசித்துவருகிறேன். கூலிவேலை செய்துவருகிறேன். என் அம்மா பெயர் கருப்பாயி. என் அப்பா அம்மா தற்போது உயிருடன் இல்லை. என்னுடன் பிறந்தவர்கள் 2 பேர். நானும் என் அக்காவும் வாரிசுகள். என் அக்கா இறந்து விட்டார். என் அக்கா சில வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். என் அம்மா பெயரில் தனக்கன்குளத்தில் உள்ள 23 செண்ட் காட்டை என் அப்பா என் அம்மா பெயரில் எழுதி வைத:து விட்டார். மேற்படி நிலம் என் அப்பா அம்மா இறந்த பின்பு நானும் என் அக்காவும் சோளம், பயிறு வகைகளை விவசாயம் செய்து வந்தோம். தற்போது விவசாயம் செய்யவில்லை. மழை தண்ணிர் இல்லாததால் மேற்படி நிலத்தில் விவசாயம் செய்யய இயலவில்லை. மேற்படி நிலத்தினை நான் வில்லங்கம்போட்டு பார்த்தபோது மேற்படி நிலம் என் அம்மா பெயரில் இருந்தது. மேற்படி நிலத்தினை விஏஓ ஆபிசில் சென்று

பார்த்தபோது மேற்படி நிலம் கருப்பாயி பெயரில் இருந்த நிலம்சரஸ்வதி என்ற பெயருக்கு மாற்றியதாக சொன்னார்கள். அது எப்படி வந்தது என்று விசாரித்தோம். எவ்வாறு பட்டா மாற்றினார்கள் என்று எனக்கு தெரியாது. விஏஓ மூலம் தெரிந்து கொண்டோம். இது சம்பந்தமாக போலிசில் புகார் கொடுத்தோம். நான் கொடுத்த புகார் மனு அ.சாஆ,1. போலிசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு தற்போது 70 வயதாகிறது.

குறுக்கு விசாரணை:

என் கணவர் பெயர் முத்துக்கருப்பத் தேவர். என் அப்பா பெயர் விருமாண்டித் தேவர். என் அப்பாவிற்கு என் அம்மா ஒரே தாரம் என்றால் சரிதான். என் அப்பா என் அம்மா பெயருக்கு பத்திரம் எழுதி வைத்தது ஒரு தான செட்டில்மெண்ட் என்றால் சரிதான். எழுதிக்கொடுத்த பத்திரம் அசல் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தின் அசலையோ அல்லது நகலையோ புகார் கொடுக்கும்போதோ போலிசார் விசாரிக்கும்போதோ கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். என அப்பா விவசாயம் செய்தது எனக்குதெரியாது.நான் என் அம்மாவும் விவசாயம் செய்தோம். நான் உள்ளூரிலேயே திருமணம் செய்துகொண்டேன். இறந்த என் அக்காள் பெயர் சீனியம்மாள். என் அக்கா இறந்து சுமார் 30 வருடமாகிறது. என் அம்மா அல்லது அப்பா பெயரில் இந்த இடத்தை அனுபவிப்பது சம்பந்தமாக பட்டா எதுவும் இருந்ததா என்றால் இல்லை. பூர்வீக இடம். நானும் என் அம்மாவும் அனுபவம் செய்ததை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் காவல் நிலையத்தில் காண்பித்தோமா என்றால் இல்லை. கிராம நிர்வாக அலுவலரிடம் கேட்டோம். தற்போது அந்த இடம் காலியிடமாக உள்ளது. 23 செண்ட்இடமும் காலியிடமாகத்தான் உள்ளது. 23 செண்டில் 11 செண்டும் 5 1.̇.2 செண்டும் பிரிக்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளது என்றால்சரியல்ல. சரஸ்வதி எவ்வாறு கிரையம் பெற்றார் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இந்தவழக்கில் எத்தனை பேர் மேல் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரஸ்வதி. காட்டுராஜா மீது புகார் கொடுத்தேன். ஆஸ்டின் பட்டி காவல் நிலையத்தில புகார் கொடுப்பதற்கு முன்பு மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுக்கப்பட்டு அங்கு விசாரணை நடைபெற்றதா என்றால் நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரில் 2 பேர் மீது தான் புகார் கொடுத்தேன். உலகராஜா, பொன்னுச்சாமி யார் என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னுடன் புகார் கொடுக்க முட்புறம் மற்றும் மகாலிங்கம் வந்தார்கள் அவர்கள் தான்

எனக்கு உதவி செய்தார்கள். முட்புறம் எனக்கு தம்பி முறையாவார். வழக்கில் புகார் கொடுத்தது ஆவணங்களை காவல் நிலையத்தில் ஒப்படைத்தது அனைத்தையும் முட்பறம் தான் செய்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்தை விற்றுக்கொடுக்குமாறு முட்புறம் என்பவரிடம்நான்சொன்னேன் என்றால சரிதான். இந்த வழக்கில் சரஸ்வதி எப்போது கிரையம் பெற்றார். என்ற விபரம் எனக்கு தெரியாது. மாவடட காவல் கண்காணிப்பாளர் மற்றும் ஆஸ்டின் பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் முன்பு வேறு எந்த புகாரும் நான்கொடுக்கவிலலை என்றால் சரிதான். சரஸ்வதி பெயரில் பட்டா மாற்றப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சரஸ்வதி காட்டுராஜா ஆகியோருக்கு உலகராஜா என்ற மகன் உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சரஸ்வதி தாவா சொத்தை பொன்னுச்சாமி என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்ற விபரம் எனக்குதெரியாது. நான் புகார் கொடுத்த காலத்திற்கு முன்பே பொன்னுச்சாமி இறந்து விடடார் என்ற விபரம் தெரியுமா என்றால் அவர் யார் என்ற விபரம் எனக்குதெரியாது. இந்த பகார் சம்பந்தமாக ஆஸ்டின்பட்டி போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 5, 6 முறை விசாரித்தார்கள். 5,6 முறை விசாரித்த போது புகார் தவிர வேறு எந்த ஆவணம் எதுவும் நான்கொடுக்கவில்லை என்றால் சரிதான். முட்புறம் என்பவர் இந்த நிலத்தை விற்று பணம் தருவதாக என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். முட்புறம் வழக்கில் ஒரு சாடசியாக உள்ளார் என்றால் சரிதான். முப்புறத்திற்கு இந்த சொத்தை விற்பனை செய்வதற்கு மகாலிங்கம் உதவியாக உள்ளார் என்றால் சரிதான். மகாலிங்கம் எனக்கு சொந்தம் இல்லை. முப்புறத்திற்கு தான் தெரியும். மகாலிங்கம் இந்த வழக்கில் சாடசியாக உள்ளாரா என்று எனக்கு தெரியாது. மாவடட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரில் நடந்த விசாரணையில் காட்டு ராஜா ஆஜரானாரா என்றால் ஆஜராகவில்லை. தாவா சொத்தை சரஸ்வதி யாருக்காவது விற்பனை செய்துள்ளாரா என்ற விபரம் தற்போது வரை எனக்குதெரியாது. சரஸ்வதி பெயரில் தாவா சொத்து சம்பந்தமாக எத்தனை கிரைய பத்திரங்கள் ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. உலகராஜா என்பவர் ஒரு அரசியல் கட்சியில் செல்வாக்கானவர் என்றால் எனக்கு அது பற்றிதெரியாது. அந்த நிலத்தில் சோளம் , கம்பு பயரிட்டது சம்பந்தமாக வரி ரசீது தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. 23 செண்ட் நிலம் நன்செய் நிலமா புன்செய் நிலமா என்றால் புன் செய் நிலம் தான். அது ஒரு காடு. கண்மாயப்பாசனம் எதுவும் கிடையாது. இந்த நிலத்திற்கு

தண்ணீர் வருவதற்கு கால்வாய் எதுவும் இலலை என்றால் சரிதான். சரஸ்வதி என் இடத்தை கிரையம் செய்தது எப்போது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் சரியான தகவல்களோடு எந்த புகாரும் கொடுக்கவிலலை என்றால்சரியல்ல. வழக்கின் எதிரி காட்டுராஜா் என்ன வியாபாரம் செய்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது. சரஸ்வதி என்பவர் கிரையம் செய்த பத்திரத்தில் காட்டுராஜா சாட்சியாக கையெழுத்து செய்துள்ளாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. 23 செண்ட் நிலம் என் தாயாருக்கு பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. நான் தான் கச்சம்மாள் என்பதை காட்டுவதற்கு சார்பு ஆய்வாளர் ஆவணங்களை பெற்றுக்கொண்டாரா என்றால் பெற்றுக்கொண்டார். சரஸ்வதி என்பவருக்கு தான் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றும் அதை அபகரிக்க வேண்டும் என்ற எண்ண்தில் பொய்யாக புகார் அளித்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால்ச ரியல்ல. நான்கொடுத்த புகாரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள ஆய்வாளா எழுதிக்கொடுத்தார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நான் எந்த கைரேகையும் வைக்கவில்லை. ஆஸ்டின்பட்டி காவல்நிலையத்தில் தான் கைரேகை வைத்தேன். ஆஸ்டின்பட்டி காவல் நிலையத்தில் நான் எந்த புகாரிலும் கை ரேகை வைக்கவில்லை. புகார் அவர்கள் தான் எழுதிக்கொடுத்தார்கள். தாவா சொத்து எனக்க ்நத விதத்திலும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக நானும் முப்பறமும் பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால்சரியல்ல. நான் புகாரில் சொல்லியுள்ளவாறு எந்த வித குற்றச்சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.